III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.296/2021

Deposition of witness for the CW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 20-07-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது அப்ரார் | Village | : |
| Father's / Husband's Name | : முகமது சலீம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>நீதிமன்ற சாட்சி</u>**

நான் இவ்வழக்கில் 2 ஆம் வாதி. இறந்துபோன முதல் வாதி என்னுடைய தகப்பனார். 3 ஆம் வாதி சாகுல் அமீது என்னுடைய தகப்பனாரின் தகப்பனார். 4 ஆம் வாதி ஹைசராபேகம் என்னுடைய தாயார். 5 ஆம் வாதி ஹலிமதுசல்மா என்னுடைய மூத்த சகோதரி. 6 ஆம் வாதி மெகரூன்னிசா என்னுடைய மற்றொரு மூத்த சகோதரி. 1 ஆம் பிரதிவாதி ஷாகிதாபீவி சித்திக் என்னுடைய அத்தை. 2 ஆம் பிரதிவாதி முகமதுசித்திக் என்னுடைய அத்தையின் கணவர். நான் தற்பொழுது வேலை எதுவும் பார்த்து வரவில்லை. 1 ஆம் வாதி என்னுடைய தகப்பனார் 09.06.2024 இவ்வழக்கு நிலுவையில் இருந்தபொழுது இறந்துபோய் விட்டார். இந்த வழக்கை முதலில் என்னுடைய தகப்பனார் உயிரோடு இருந்தபொழுது அவரும் நானும், மற்றும் 3 ஆம் வாதி என்னுடைய தாத்தா சாகுல் அமீதும் சேர்ந்து பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குரையில் சொல்லப்பட்டிருக்கின்ற B அட்டவணை சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும், மற்றும் வழக்கு சொத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்காக இழப்பீடும் மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தோம். வழக்கு நிலுவையில் இருந்த சமயம் என்னுடைய தகப்பனார் இறந்த போனதால் 4 முதல் 6 வரையுள்ள வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள். இவ்வழக்கு தற்பொழுது பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக இருந்து வருகின்றது, தற்பொழுது பெரியோர்கள் முன்னிலையில் வாதிகளும் பிரதிவாதிகளும் சமாதானம் பேசி ஒரு சமாதான முடிவை எட்டியிருக்கின்றோம். அதன்படி வழக்குரையில்

சொல்லப்பட்டிருக்கின்ற B அட்டவணை சொத்தில் தற்பொழுது குடியிருந்து வருகின்ற 1, 2 பிரதிவாதிகள் 31.10.2026 க்குள் வழக்கு சொத்திலிருந்து காலி செய்து வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், வழக்கு B அட்டவணை  சொத்தில் பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எந்த உரிமையையும் கோருவதில்லை என்றும் வழக்கு B அட்டவணை சொத்தில் பிரதிவாதிகள் இதுவரை குடியிருந்து வந்ததற்கான இழப்பீடு எதனையும் வாதிகள் கோருவதில்லை என்றும் பேசி முடிவு செய்யப்பட்டுவிட்டது. இதன் அடிப்படையில் இன்று ஒரு கூட்டு சமாதான குறிப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த குறிப்பாணையில் வாதிகள் நாங்கள் 5 பேரும், பிரதிவாதிகள் 2 பேரும் கையெழுத்திட்டிருக்கின்றார்கள்.  இந்த கூட்டுக் குறிப்பாணையை ஏற்று தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.  மற்ற வாதிகளில் 3 ஆம் வாதியான என்னுடைய தாத்தாவிற்கு மிகுந்த வயதாகிவிட்டது.  4 ஆம் வாதி என்னுடைய தாயார் வீட்டில் இருந்து வருவதாலும், என்னுடைய சகோதரிகளில் 5 ஆம் வாதி ஹலிமத்துசலிமா பெங்களூரிலும், 6 ஆம் வாதி மெகருனின்ஷா கல்கத்தாவிலும் குடியிருந்து வருவதால் அவர்களால் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியவில்லை.  இந்த சமாதான குறிப்பாணையில் உள்ள கையெழுத்துக்கள் அவர்களுடையது தான் என்று உறுதியளிக்கிறேன்.  கூட்டு சமாதான குறிப்பாணையின் அடிப்படையில் தகுந்த உத்திரவு பிறப்பிக்க வேண்டும். நீதிமன்ற கட்டணத்தை திரும்ப வழங்க உத்திரவு பிறப்பிக்க வேண்டும்.